## ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறக்கப்படுவது வெறும் பெரியார் படமல்ல!

# சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தலைமையால் உலகாளப் போவதற்கான முன்னூட்டத் தடம்!



எவ்வளவு நல்ல தத்துவமானாலும் அதை முன்னெடுக்கும் தலைமை தகுதி வாய்ந்ததாய் அமைந்தால் மட்டுமே அந்தத் தத்துவம் வெற்றிபெறும். அப்படி ஒரு தத்துவத்தையும் தலைமையை யும் காலம் பெரியாரின் வடிவத்தில் தமிழர்களுக்கு வழங்கியது. அந்தக் காலக்கொடையை அதிகாரத்தில் அமரவைத் தார் அண்ணா. அவருக்குப் பின் அந்தத் தத்துவத்தை தளராமல் அரியணையில் அமரவைத்தார் கலைஞர்.



**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

எம்.ஜி.ஆர். என்ற திரை பிம்பத்தை ஏந்தி அந்தத் தத் துவத்தை இன எதிரிகள் சிதைக்க முயன்றபோது ஆட்சிக் கட் டிலை இழந்தும் காவல் அரணாய் காத் துநின்றவர் அவர். அதிகாரத்திற்கு வந்த போதெல்லாம் தத்துவத்தை அரி யணை ஏற்றியவரும் அவரே. அவருக் குப்பின் தத்துவம் என்னாகும்? கவலை கொண்டவர்கள் இருக்கத் தான் செய்தார்கள்; உலகெங்கும் நூறாண்டுகள் ஒரு தத்துவம் கோலோச் சியது இல்லை என்பதால்! கவலை கொண்டவர்கள் இன்று கர்வம் கொள் கிறார்கள். தத்துவம் தகுதிமிக்க தலை வனின் குடையின் கீழ் பத்தி ரமாய் இருப்பதால்! அதற்கு தமிழ் எல்லைக்குள் அண் ணாவால் அரியாசனம் ; இந் திய எல்லைக்குள் கலைஞ ரால் சரியாசனம். முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மாமனிதரால் அது உலகமயமாகி இன்று உச் சம் தொட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறக் கப்படுவது வெறும் படமல்ல; சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தலைமையால் உலகாளப்போவதற்கான முன்னூட்டத் தடம்!

**வாழ்க நீ எம்மான் இவ்வையத்து நாட்டிலெல்லாம்.**

## சமத்துவம் போற்றுவோம்! பெரியாரியம் பழகுவோம்!

# பெரியாரின் பேரொளி உலகுக்கு வழிகாட்டட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

இலண்டன், செப். 7–

சமத்துவம் போற்றுவோம், பெரி யாரியம் பழகுவோம் எனவும், பெரி யாரின் பேரொளி உலகுக்கு வழி காட்டப்படும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் சமூக வலைதளப்பதிவு வரு மாறு:–

**பழமைவாதங்களும் பிற்போக்குத் தனங்களும் நிறைந்திருக்கும் சமூகத் தில், அறிவார்ந்த உரையாடல்களை நிகழ்த்தி, மக்களுக்கு விழிப்புணர் வூட்டி, தலைநிமிரச் செய்து, அவர் களது நம்பிக்கையை வாக்குகளாகப் பெற்று, ஒட்டுமொத்த இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் தமிழ்நாடு உயர்ந்தி ருப்பதற்கான அடித்தளம், அறிவா சான் தந்தை பெரியார் கண்ட சுய மரியாதை இயக்கம்!**

**ஆயிரம் ஆண்டுகளாக அறிவார்ந்த பலரின் கனவாக இருக்கும் ஆக்ஸ் போர்டு அறிவாலயத்தில், ஆயிர மாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத் தப்பட்ட மக்களின் கனவாக எழுந்த சுயமரியாதை இயக்கத்தையும் புரட்சி யாளர் பெரியாரையும் போற்றினேன்!**

**சமத்துவம் போற்றுவோம்!**

**பெரியாரியம் பழகுவோம்!**

**பெரியாரின் பேரொளி உலகுக்கு வழிகாட்டட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## ஆக்ஸ்போர்ட் அறிவாலயத்தில்

# பேராசிரியராகத் தமிழ்த் தொண்டாற்றியவர் ஜி.யு. போப்!

## ஜி.யு.போப் கல்லறையில் மரியாதை செலுத்தியது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, செப். 7–

ஆக்ஸ்போர்ட்டில் ஜி.யு.போப் அவர்களது கல்லறை யில் மரியாதை செலுத்தியது குறித்து தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:–

**ஜி.யு.போப்!**

- 19 வயதில் தமிழ்நாட்டிற்கு வந்தார்!
- தமிழ் மேல் தீராக் காதல் கொண்டார்!
- தமிழ்ச்சுவையை உலகறியத் திருக்குறள், திருவாசகம், நாலடியார் உள்ளிட்ட நூல்களை மொழி பெயர்த்தார்!
- ஆக்ஸ்போர்ட் அறிவாலயத்தில் பேராசிரியரா கத் தமிழ்த் தொண்டாற்றினார்!

ஆக்ஸ்போர்ட் சென்றுவிட்டு, அங்கு உறங்கும் தமிழ் மாணவரைப் போற்றாமல் வருவது அறமாகுமா?

அங்குள்ள ஜி.யு.போப் அவர்களது கல்லறையில் மரியாதை செலுத்திய தருணம்...



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “ஐயன்மேன் 5150 டிரையத்லான் சென்னை (IRONMAN 5150 TRIATHLON CHENNAI)” போட்டி அறிவிப்பு குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையில் நேற்று முன்தினம் (05.9.2025) நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஐயன்மேன் இந்தியாவின் தலைவர் தீபக் ராஜ், ஐயன்மேன் இந்தியா போட்டியின் துணை நடுவர் ஆர்த்திசுவாமிநாதன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



திண்டுக்கல் பகுதி 4,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



பாலக்கோடு பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கொண்டலாம்பட்டி பகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.



புகளூர் நகரம்,
கரூர் மாவட்டம்.



சலவன்பேட்டை பகுதி,
வேலூர் மாவட்டம்.



அரக்கோணம் மேற்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.